
# பலஸ்தீன விவகாரம்

## பற்றிய நாற்பது விடயங்கள்



கலாநிதி முஹ்ஸின் முஹம்மத் ஸாலிஹ்

# பலஸ்தீன விவகாரம் பற்றிய நாற்பது விடயங்கள்

*கலாநிதி முஹ்ஸின் முஹம்மத் ஸாலிஹ்*

*தமிழில்: அஷ்ஷெய்க் யூ.கே. றமீஸ் (நளீமி)*


MMC

**Meelparvai Media Centre**

194/2, Dematagoda Road, Colombo 09.
Tel: 0112 688341, 0602152621, Fax : 0112 688341,
Email: meelparvai@gmail.com

**தலைப்பு:** பலஸ்தீன விவகாரம் பற்றிய நாற்பது விடயங்கள்

**நூலாசிரியர்:** *கலாநிதி முஹ்ஸின் முஹம்மத் ஸாலிஹ்*

**தமிழாக்கம்:** *அஷ்ஷெய்க் யூ.கே. றமீஸ் (நளீமி)*

**முதற் பதிப்பு:** *ஒக்டோபர் 2007,*

**விலை:** *ரூபா 40.00*

**அச்சுக் கோவை:** *அஷ்கர் தஸ்லீம்*

**தளக் கோலம்:** *எம்.டபிள்யூ.ஏ. அஸார்*

**அட்டை வடிவமைப்பு:** *அஹ்ஸன் ஆரிப்*

**அச்சாக்கம்:** *ஏ.ஜே. பிரின்ற்ஸ் (பிரைவேற்) லிமிட்டட்*
*44, ஸ்டேஷன் றோட், தெஹிவளை*

**வெளியீடும் பதிப்புரிமையும்:**
*மீள்பார்வை ஊடக மையம்*
*194/2, தெமட்டகொட றோட், கொழும்பு 09.*

**Title:** Palestina Vivaharam Pattiya Natpathu Vidayangal,
**Author:** Dr. Muhsin Muhammadh Saih,
**Translator**: As-sheikh U.K. Ramees (Naleemi),
**Typeset:** Ashkar Thasleem,
**Layout:** M.W.A. Azar,
**Cover Design:** Ahsan Ariff,
**Printers:** A.J. Prints (Pvt) Ltd,
**Publishers:** MMC, 194/2 Dematagoda Road, Colombo 09,
**First Print:** October 2007,
**Price:** Rs. 40.00,
**Copyright:** © MMC.

## மொழிபெயர்ப்பாளர் உரை

"பலஸ்தீன் மிகவும் புனிதத்துவம் வாய்ந்தது. அது முஸ்லிம்களது முதல் கிப்லா. மிஃராஜுடன் தொடர்புபட்ட பூமி. நபிமார்கள் வாழ்ந்த இடம். எந்த நிலத்துக்குமில்லாத புனிதத்துவம் இந்த இடத்துக்குண்டு. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஏனைய நாடுகளின் பிரச்சினையை விட இது முக்கியமானதும் முதன்மையானதுமாகும். பலஸ்தீனர்கள் தமது பூமியை மீட்க முஸ்லிம்கள் உதவ வேண்டும். உலகெங்கிலும் உள்ள சியோனிஸ்டுகள் இஸ்ரேல் தமது நாடு என்றும், இஸ்ரேலியப் பிரச்சினை தமது பிரச்சினை என்றும் கருதுகின்றனர். அவ்வாறாயின், அதனைவிட பலஸ்தீனப் பிரச்சினையை தமது சொந்த விவகாரம் என்ற கருத வேண்டியவர்கள் முஸ்லிம்களே. அந்தப் பூமி முழு முஸ்லிம் சமூகத்துக்கும் உரியது. அது பலஸ்தீனர்களுக்கு மட்டும் உரியதன்று. எனவே அந்நிலத்தை மீட்க உதவிக் கரம் நீட்டுவது அனைத்து முஸ்லிம்களினதும் கடமையாகும்."

*-கலாநிதி யூசுப் அல் கர்ளாவி-*

*கலாநிதி யூசுப் அல் கர்ளாவியின் பத்வா பலஸ்தீன விவகாரத்தின் முக்கியத்துவத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. பலஸ்தீனப் பிரச்சினை 1948 முதல் இன்றுவரை தொடர்கின்ற ஒரு எரியும் பிரச்சினையாகும். இது இன்று பல பரிமாணங்களைப் பெற்றுக்*

கூர்மையடைந்துள்ளது. எனவே, இது தொடர்பில் எமது கவனத்தைச் செலுத்துவதும் அவர்களுக்கு உதவுவதும் எமது கடமையாகும்.

கலாநிதி முஹ்ஸின் முஹம்மத் ஸாலிஹ் எழுதிய "பலஸ்தீன விவகாரம் பற்றிய நாற்பது விடயங்கள்" என்ற இச்சிறுநூல் அளவில் சிறியது. ஆனால், பெரிய பல விடயங்களை இரத்தினச் சுருக்கமாக முன்வைத்துள்ளது. இப்பிரச்சினை பற்றிய ஒரு பூரண தெளிவை இந்நூல் வழங்கும் என்பதில் ஐயமில்லை. எனினும், இந்நூல் 2002ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகும். அதுவரையான விடயங்களையே இந்நூல் பேசியுள்ளது. இதன் பின்னரான பலஸ்தீனப் போராட்டக் களம் விசாலித்துள்ளது. ஹமாஸ் இன்று பெரும் அரசியல் சக்தியாக வடிவெடுத்துள்ளது. பலஸ்தீன், ஹமாஸ் பற்றி எழுதப்பட்டுள்ள புத்தகங்களை வாசிப்பதன் மூலம் இதுபற்றி அறிந்து கொள்ள முடியும்.

இந்நூல் வெளிவரக் காரணமான அனைவரையும் நான் நன்றியுணர்வுடன் நினைவுகூர்கின்றேன். இதனை மொழிபெயர்க்குமாறு என்னை வேண்டிக்கொண்ட அஷ்ஷெய்க் ஏ.எம்.எம். ஆஸாத், கையெழுத்துப் பிரதியை எழுதி உதவிய மனைவி இல்மியா, கணனி வடிவமைப்பை மேற்கொண்ட அஷ்கர் தஸ்லீம் அத்தோடு இதனை வெளியிடுகின்ற மீள்பார்வை ஊடக மையத்தின் அனைத்து உறுப்பினர்களும் எனது ஆழ்ந்த நன்றிக்குரியவர்கள்.

இந்நூலை எழுதிய கலாநிதி முஹ்ஸினுக்கும் மொழிபெயர்த்த எனக்கும் பலஸ்தீனில் இன்னல்களை எதிர்கொண்டுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் அதிகமதிகமாகப் பிரார்த்திக்குமாறு வேண்டிக் கொள்வதுடன் வாசகர்களது மேலான ஆலோசனைகளையும் வேண்டி நிற்கின்றேன்.

*இஸ்லாமிய ஊழியன்*
***யூ.கே. றமீஸ்***
*10/07/2007*

# பலஸ்தீன விவகாரம் பற்றிய நாற்பது விடயங்கள்

1. ஷாம் நாட்டின் தென்மேற்குப் பிரதேசமே பலஸ்தீன் என்று அழைக்கப்படுகின்றது. ஆசியாவின் மேற்குப் புறத்திலுள்ள மத்திய தரைக் கடற்கரையில்தான் இது அமைந்துள்ளது. ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்குமான இணைப்புப் பாலமாக பலஸ்தீன் விளங்கு கின்றது. ஐரோப்பா இதன் அருகாமையில் உள்ளமையும் இதன் சிறப்பம்சமாகும். வடக்கே லெபனானும் வட கிழக்கில் சிரியாவும் கிழக்கே ஜோர்தானும் தெற்கே எகிப்தும் இதன் எல்லைகளாகும். தற்போது 27000 சதுர கிலோ மீற்றர்களை தனது எல்லையாகக் கொண்டுள்ளது. இங்கு மத்திய தரைக்கடலில் நிலவும் சமநிலையான காலநிலை காணப்படுகின்றது.

2. உலகில் நாகரிகம் தோன்றிய மிகப் புராதன பிரதேசமாக இது காணப்படுகின்றது. நவீன தொல் பொருளியல் ஆய்வுகளின்படி கி.மு. 9000 வருடங்களில் இங்கு மனிதர்கள் வாழ்ந்ததும், விவசாயம் செய்தமையும் கண்டறியப்பட்டுள்ளது. வரலாற்றில் மிகப் புராதன நகரமான அரீஹா (ஜெரிக்கோ) இப்பிரதேசத்தில் கி.மு. 8000களில் நிர்மாணிக்கப்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பலதரப்பட்ட நாகரிகங்கள் இன்றுவரை இங்கு தோன்றி வளர்ந்துள்ளன.

3. ஒவ்வொரு முஸ்லிம் குடிமகனும் பலஸ்தீனின் அந்தஸ்தை புரிந்து வைத்துள்ளான். **"இது புனித பூமியாகும்; அருள் நிறைந்த இடமாகும்"** என அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. இங்குதான் முஸ்லிம்களின் முதல் கிப்லாவும், மூன்றாவது புனிதஸ்தலமுமான மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ளது. இது இஸ்ரா இடம்பெற்ற பூமியாகும். நபியவர்கள் இந்த பூமிக்குத்தான் இரவில் வந்து சேர்ந்தார்கள். இது நபிமார்கள் வாழ்ந்த பூமியாகும். **"இப்பூமியில் நிறைய நபிமார்கள் பிறந்துள்ளனர்; வாழ்ந்து வந்தனர்; அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்"** என்பதாக அல்குர்ஆன் தெரிவிக்கின்றது. இஸ்லாமியக் கண்ணோட்டத்தின்படி இங்கு மக்கள் திரட்டப்படுவர். இங்கிருந்துதான் மக்கள் பரவிச் செல்வர். இது இஸ்லாத்தின் தாய்நாடாகும். இங்கு இருப்பவர் அல்லாஹ்வின் பாதையில் போராடியவராகக் கருதப்படுவார். கியாமத் வரை சத்தியத்துக்காகப் போராடுவோர் இங்கிருப்பர்.

4. பலஸ்தீன் யூத, கிறிஸ்தவர்களுக்கும் புனித பூமியாகும். இப்பூமி தமக்கு வாக்களிக்கப்பட்டதென்றும், தமது வரலாறு இப்பூமியை சுற்றி வருவதாகவும் தமது நபிமார்கள் இப்பூமியில் அடங்கப்பட்டிருப்பதாகவும் குத்ஸ், கலீல், போன்ற இடங்களில் தமது புனிதஸ்தலங்கள் இருப்பதாகவும் யூதர்கள் கருதுகின்றனர். கிறிஸ்தவர்கள் இங்குதான் தமது நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் பிறந்ததாகவும் இங்குதான் தமது பிரச்சாரத்தை மேற்கொண்டதாகவும் கருதுகின்றனர். தமது புனித மதஸ்தலங்கள் குத்ஸ், பைத்லஹ்ம் (பெத்லஹேம்) நாஸிரா போன்ற இடங்களில் இருப்பதாகக் கருதுவர்.

5. பனூ இஸ்ரவேலர்களின் நபிமார்கள், நல்லவர்கள், ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், தாலூத் அலைஹிஸ்ஸலாம் போன்றோரின் உண்மையானதும், பொருத்தமானதுமான வாரிசுகள் முஸ்லிம்கள்தாம் என்பது எமது நம்பிக்கையாகும். ஏனெனில், அவர்களின் பின்னால் பலஸ்தீனை ஏகத்துவ நிழலின் கீழ் நீண்ட நாட்கள் ஆட்சி செய்தவர்கள் முஸ்லிம்களே. நபிமார்கள் காட்டிய பாதையில் சென்றவர்களும் இவர்களேயாவர். மேலும் யூதர்கள் சத்தியப் பாதையை விட்டு தடம் புரண்டவர்கள். தமது வேதத்தில் திரிபுகளை ஏற்படுத்தியவர்கள். நபிமார்களைக் கொன்றவர்கள். எனவே, அல்லாஹ்வின் கோபத்திற்கும், சாபத்திற்கும் உட்பட்டவர்கள் என்பதும் முஸ்லிம்களது நம்பிக்கையாகும்.

6. யூதர்களும்[1], கிறிஸ்தவர்களும்[2] பலஸ்தீனை[3] ஆட்சி செய்தபோது மிக மோசமாக நடந்து கொண்டனர். ஏனைய மதங்களுடனான சக வாழ்வை அவர்கள் ஏற்கவில்லை. அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டனர். இன சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால், முஸ்லிம்கள் மத சகிப்புத் தன்மையுடன், சகவாழ்வை மேற்கொண்டு இணைந்து வாழ்ந்தனர். அடுத்தவர்களின் உரிமைகளைப் பாது காத்தனர்.

7. பலஸ்தீனின் புராதன குடிகள் கன்ஆனியர்கள். இவர்கள் அறபு தீபகற்பத்திலிருந்து 4600 வருடங்களுக்கு முன்னர் வந்தவர்கள். இது ஆரம்பத்தில் "கன்ஆனியர்களின் பூமி" என்றே பிரபலமாக இருந்தது. தற்போதைய பலஸ்தீனர்கள் கன்ஆனியர்களின் வம்சத்தவரும், மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் இருந்து வந்து இணைந்து கொண்ட பலஸ்தீனர்களும், அறபு கோத்திரங்களுமாவர். பலஸ்தீனை பல சமூகங்கள் ஆட்சி செய்த போதிலும் அங்குள்ளவர்கள் தொடர்ந்தும் அங்கு வாழ்ந்துள்ளனர். இஸ்லாத்தின் வருகையைத் தொடர்ந்து அங்கிருந்த பெரும்பான்மையினர் இஸ்லாத்தைத் தழுவினர். அத்தோடு அவர்கள் அறபு மொழியை தமது மொழியாக ஏற்றனர். ஹிஜ்ரி 15 (கி.பி. 636) முதல் இன்று வரை தொடராக பலஸ்தீன் பூமியில் இஸ்லாமிய அடையாளம் (Islamic Identity) உறுதிப்படுத்த முடியுமான ஒன்றாக உள்ளது. 1948ஆம் ஆண்டிலிருந்து சியோனிஸ ஆக்கிரமிப்பா ளர்களால் பலஸ்தீனர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதனை ஒருபோதும் ஏற்க முடியாது.

8. பலஸ்தீனில் யூதர்களுக்கும் வரலாற்று உரிமை உண்டு என முன்வைக்கப்படுகின்ற வாதம் அறபு முஸ்லிம்களின் நில உரிமைக்கு முன்னால் முறியடிக்கப்படுகின்றது. யூதர்கள் தமது தேசத்தை அங்கு உருவாக்குவதற்கு 1500 வருடங்களுக்கு முன்பிருந்தே பலஸ்தீனக் குடிகள் அங்கு தொடராக வாழ்ந்து வருகின்றனர். இன்றுவரை யூதர்களுக்கு அங்கு எந்தத் தொடர்பும் இல்லை. அவர்கள் பலஸ்தீனின்

1. பனூ இஸ்ராயீல்களின் நபிமார்கள், நல்லவர்கள் விதிவிலக்கு.

2. ரோமானியர்கள், பைஸாந்தியர்கள், கிறிஸ்தவ தீவிரவாதிகள் (Crusaders)

3. குறிப்பாக பைதுல் முகத்திஸை

ஒரு பகுதியை கிட்டத்தட்ட 4 நூற்றாண்டுகளாக ஆட்சி செய்துள்ளனர். அது கி.மு.1000-கி.மு.586க்கு இடைப்பட்ட காலத்திலாகும். அசீரிய (Assyria), பாரசீக, பிர்அவ்னிய, கிரேக்க, ரோம ஆட்சிகள் அழிந்து விட்டதுபோன்று அவ்வாட்சியும் நீங்கிவிட்டது. ஆனால், பலஸ்தீனர்கள் அந்தப் பூமியில் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளனர். அங்கு இஸ்லாமிய ஆட்சி நீண்ட காலம் தொடர்ந்திருந்தது. கி.பி.636-கி.பி.1917 வரை இது தொடர்ந்தது. இடையில் சுமார் 90 வருடங்கள் சிலுவை வீரர்கள் ஆட்சி செய்தனர். மொத்தமாக 1200 வருடங்கள் பலஸ்தீன் முஸ்லிம்களிடம் இருந்தது. பலஸ்தீனுடனான யூதர்களின் தொடர்பு 1800 வருடங்களாக கி.பி.135-கி.பி.20ம் நூற்றாண்டு வரை இருக்கவில்லை. இக்காலத்தில் யூதர்களின் அரசியல் தொடர்போ, நாகரிக இணைப்போ, தலைமைத்துவமோ எதுவுமே இருக்கவில்லை. அவர்களது வேதப் போதனைகள் அப்பூமிக்கு மீள வருவதனை ஹராமாக்கி தடுத்திருந்தது. பிரபல எழுத்தாளர் ஆர்தர் கோய்ஸ்லருக்கு முன்பு ஆய்வு செய்த சில யூதர்களின் கருத்துப்படி சமகால யூதர்களில் 80 வீதமானவர்களுக்கு பலஸ்தீனுடன் வரலாற்றுத் தொடர்போ, பனூ இஸ்ராயீல்களுடனான இனத்துவ தொடர்போ இல்லை. இன்றைய யூதர்களில் மிகப் பெரும்பான்மையினர் கஸர் (Khazar)[4] யூதர்களின் வம்சா வழியினர் ஆவர். இது கவ்காஸ் பகுதிக்கு வடக்காக வாழ்ந்த பழைய துருக்கிய, தாத்தாரிய கோத்திரமாகும். கி.பி. 8ஆம் நூற்றாண்டுகளில்தான் இவர்கள் யூதர்களாக மாறினர். எனவே, யூதர்களுக்கான சிறிய உரிமையும் பலஸ்தீனில் இல்லை. அவர்களது உரிமைகள் தென் ரஷ்யாவுடன்தான் தொடர்புபடுகின்றது.

இன்னொரு வகையிலும் யூதர்களுக்கும் பலஸ்தீனுக்கும் இடையிலான தொடர்பு குறித்த வாதம் முறியடிக்கப்படுகின்றது. அதாவது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புனித பூமிக்குச் சென்றதனை அதிகமான பனூ இஸ்ராயீல்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அப்படி நிகழவில்லை என்று மறுக்கின்றனர். அதேபோன்று பாரசீக சக்கரவர்த்தி கோரஷ் யூதர்களை அடக்கியாண்ட காரணத்தினால் பபிலோனியாவை விட்டு அவர்கள் புனித பூமிக்குச் சென்றதனையும்

---

4. கஸர் (Khazar) என்பது கஸ்பியன் கடல் பிரதேசத்தில் கவ்காஸ் பிரதேசத்துக்கு வடக்காக வாழ்ந்த ஒரு கோத்திரமாகும்.

பெரும்பான்மையான யூதர்கள் ஏற்பதில்லை. அத்தோடு வரலாறு நெடுக இன்றுவரை யூதர்கள் பலஸ்தீனில் சிறப்பாக இருந்த காலகட்டத்தில் கூட 40 வீதத்தைக் கடக்கவில்லை.

9. பலஸ்தீனில் யூதர்களைத் திரட்டி அங்கு தமக்கான ராஜ்யத்தை உருவாக்கும் நோக்கம் கொண்ட சியோனிஸ இயக்கத்தின் தோற்றம் 16 ஆம் நூற்றாண்டுடன் தொடர்புபடுகின்றது. அக்காலத்தில் ஐரோப்பிய கிறிஸ்தவர்கள்- குறிப்பாக புரட்டஸ்தாந்தவர்களுக்கு மத்தியில் சியோனிஸ தொடர்புகள் வெளிப்பட்டன. எனினும், ஐரோப்பாவில் தேசியவாத, இனவாத கருத்தியல்கள் தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டில் தேசியவாத ஆட்சிகள் தோன்றின. இக்காலகட்டத்தில்தான் குறிப்பாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் "யூதர்கள் தொல்லை தருபவர்கள்" என்ற கருத்தியல் தோன்றியது. இதன் விளைவாக ரஷ்யர்கள் யூதர்களை கடுமையாக வதைத்தவர். யூதர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டனர். இதன் பின்னர் யூதர்கள் ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் பல அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கினர். மேலும் "யூதர்கள் ஏனைய சமூகங்களுடன் இணைந்து வாழ வேண்டும்" என்ற கருத்துகளுக்காக பாடுபட்ட யூத இயக்கங்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டன.

10. யூத ராஜ்யத்தை உருவாக்குவதற்கான முதல் எட்டுதான் பலஸ்தீனைப் பிடிப்பது. இதனை மேற்குலக காலனித்துவவாதிகள் யூதர்களுக்கு செய்து கொடுத்தனர். குறிப்பாக பிரித்தானியா இதற்கு உதவியது. இதனூடாகத்தான் இஸ்லாமிய உலகில் மேற்குலக-சியோனிஸ அபாயம் உருவானது. இஸ்ரேலை உருவாக்குவதனூடாக ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் நிலத் தொடர்புள்ள இஸ்லாமிய உலகைத் துண்டாடுவது ஒரு நோக்கமாகும். இதனூடாக இஸ்லாமிய ஒற்றுமையைத் தடுக்கலாம். அதனைப் பலவீனப்படுத்தலாம். ஆர்ப்பரித்து வரும் இஸ்லாமிய எழுச்சியை நசுக்கலாம். அந்நாடுகளை தங்கி வாழும் மூன்றாம் மண்டல நாடுகளாக மாற்றலாம். மூலப் பொருட்களை வழங்கும் நாடாக அவற்றை மாற்றி தனது உற்பத்திகளை விற்பனை செய்யும் சந்தைகளாகவும் அவற்றைப் பயன்படுத்தலாம். ஒட்டுமொத்தமாகக் கூறின் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் இடைவெளியை நிரப்புவதற்குத் தயாராயிருந்த பாரிய இஸ்லாமிய சக்தியின் உதயத்தை அஸ்தமிக்கச் செய்யலாம்

என்பவையே அவர்களது நோக்கங்களாகும். யூத-சியோனிஸ இருப்பையும், வளர்ச்சியையும் நியாயப்படுத்துவது முஸ்லிம்களின் வீழ்ச்சி, பலவீனம் பின்னடைவுக்குப் பொறுப்பேற்பதாகும். முஸ்லிம் சமூகத்தின் எழுச்சியையும் ஒற்றுமையையும் பலத்தையும் நியாயப் படுத்துவது, முஸ்லிம் சமூகத்தில் மூக்கை நுழைத்துள்ள யூத-சியோனி ஸத் திட்டங்களை தவிடு பொடியாக்கி விடும்.

*11.* சர்வதேச சியோனிஸ இயக்கம் சுவிட்சர்லாந்திலுள்ள பால் (Bal) நகரில் *1987* ஆகஸ்ட் மாதம் தியோடர் ஹேர்ஸலின் (Theodor Herzl) தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வியக்கம் மேற்குலக காலனித்துவ சதித் திட்டங்களோடு தன்னை இணைத்துக் கொண்டது. முதலாம் உலகப் போர் முடியும் வரை பாரிய அடைவுகள் எதனையும் அடைய அவர்களால் முடியவில்லை. சியோனிஸ இயக்கமானது யூத தேசியவாத, பாரம்பரியவாத, மதவாதப் பின்னணிகளைக் கொண்ட பிரபலமான இனவாத இயக்கமாகும். பலஸ்தீனர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களது நிலங்களை கபளீகரம் செய்வதன் ஊடாகத்தான் தமக்கு வெற்றி கிடைக்கும் என்று அவர்கள் நம்புகின்றனர். சியோ னிஸ சிந்தனைக்கும் சடவாதம், ஜனநாயகம், முதலாளித்துவம், சம உடமைக் கலாச்சாரம் போன்றவற்றுக்கும் இடையில் எவ்வித வித்தியாசமுமில்லை. இறுதியில் அனைத்தும் சியோனிஸம்தான். சியோனிஸ இயக்கத்தை அடையவே இவை முயற்சிக்கின்றன.

*12.* சியோனிஸத் திட்டங்களை பிரித்தானியா ஏற்றுக் கொண்டது. பலஸ்தீனில் யூதர்களுக்கான இனவாத நாட்டை உருவாக்குவதற்கான பல்ஃபூர் (Balfour) உறுதிமொழி *1917* நவம்பரில் வழங்கப்பட்டது. இதன் மூலம் *1918* செப்டம்பரில் பலஸ்தீன ஆக்கிரமிப்பைச் சாதிக்க முடியுமாக இருந்தது. ஷரீப் ஹுஸைனின் தலைமையில் இயங்கிய அறபிகளுக்குக் கொடுக்கப்பட்ட "சுதந்திரம் வழங்கப்படும்" என்ற வாக்குறுதிகள் மீறப்பட்டன. *1916* மே மாதம் பிரித்தானியாவுக்கும் பிரான்ஸுக்கும் இடையில் "சேக்ஸ்-பேக்கோ" உடன்படிக்கை கைச்சாத்தானது. இதன்படி பலஸ்தீனம் சர்வதேச நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. பின்னர் *1920* ஏப்ரல் மாதம் நடைபெற்ற "சான் ரீமோ" உடன்படிக்கையின்படி பலஸ்தீனை பிரித்தானியா சொந்த மாக்கிக் கொண்டது.

13. பிரித்தானியாவின் ஆக்கிரமிப்பின் கீழ் பலஸ்தீன் இருந்த காலகட்டத்தில் (1918-1948) யூதர்களின் குடிவரவை தாராளமாக அங்கீகரித்தது. இதனால் பலஸ்தீனில் யூதர்களின் எண்ணிக்கை பலமடங்காக அதிகரித்தது. 1918ல் 55,000 யூதர்கள் இருந்தனர். 1948ல் இத்தொகை 646,000ஆக அதிகரித்தது. பலஸ்தீன் சனத்தொகையில் 8 வீதமாக இருந்தவர்கள் 31 வீதமாக அதிகரித்தனர். இதேபோன்று யூதர்களின் நில உடமையும் அதிகரித்தது. சுமார் 0.5 மில்லியன் தோனம்[5] நிலத்தை வைத்திருந்தவர்கள், 1948ல் ஒரு மில்லியன் மற்றும் 800 ஆயிரம் தோனம் நிலத்தை சொந்தமாக வைத்திருந்தனர். இது முழு நிலப்பரப்பில் 2 வீதத்திலிருந்து 6.7 வீதமான அதிகரிப்பாகும். இவை யனைத்தும் பிரித்தானியாவின் ஏற்பாட்டில் யூதர்களுக்கு வழங்கப்பட்ட வையாகும். மிகவும் பாதுகாப்பற்ற, அபாயகரமான நிலையிலும் 30 வருடங்களாக பலஸ்தீனர்கள் தமது பெரும்பான்மையைத் தக்க வைத்துக் கொண்டனர். 69 வீதமான பலஸ்தீன சுதேச மக்கள் 93.3 வீதமான நிலப்பரப்பைத் தக்கவைத்துக் கொண்டனர். எனினும், பிரித்தானியாவின் பாதுகாப்புடன் யூதர்கள் தமது பொருளாதார, அரசியல், கல்வி, இராணுவ, சமூக நிறுவனங்களைக் கட்டியெழுப்பிக் கொண்டனர். 1948ஆம் ஆண்டு 292 குடியேற்றங்களை ஏற்படுத்தினர். 70,000 போராளிகள் கொண்ட ராணுவ சக்தியொன்றையும் ஏற்படுத்திக் கொண்டனர். தனி நாடாக தம்மைப் பிரகடனப்படுத்தத் தயாராயினர்.

14. பலஸ்தீனுக்கு எதிரான சூழ்ச்சிகள் பாரியளவுக்கு அதிகமாக நடந்து கொண்டிருந்த அதே சமயம் பலஸ்தீனர்கள் தமது சக்திக்குட் பட்ட வகையில் பிரித்தானிய ஆக்கிரமிப்புக்கும் சியோனிஸ சதிக்கும் எதிராக திரண்டெழுந்தனர். சுதந்திரத்தை வேண்டி நின்றனர். தேசிய வாத, இஸ்லாமிய சக்திகள் அனைத்தும் திரண்டெழுந்து அல்ஹாஜ் அமீனுல் ஹுஸைனியின் தலைமையில் கூடினர். சமூகத்தைத் திரட்டி (Society Mobilization) அரசியல் நகர்வுகளையும் பலமான போராட்டங் களையும் முன்னெடுத்தனர். 1920 குத்ஸ் போராட்டம், 1921ல் யாபா புரட்சி, 1929ல் பர்ராக் (Barrak), 1933 ஒக்டோபர் புரட்சி போன்றவை குறிப்பிடத்தக்கவை. அத்தோடு இஸ்ஸுதீன் அல் கஸ்ஸாமின் தலைமையில் ஜிஹாத் இயக்கங்களும் தோன்றின. 1936-1939களில்

5. ஒரு தோனம் = 2,500 சதுர மீற்றர்

ஏற்பட்ட பெரும் புரட்சிகள் காரணமாக இன்னும் 10 வருடங்களில் பலஸ்தீனுக்கு சுதந்திரம் வழங்குவதற்கும், இன்னும் 5 வருடங்களில் யூதர்களுக்கு பலஸ்தீன் பூமியை விற்பனை செய்வதனை விட்டுவிடுவதற்கும் யூதர்களின் குடிவரவை நிறுத்துவதற்கும் பிரித்தானியர் உடன்பட்டனர். 1939 மே மாதம் இதனை வெள்ளை நூலில் (White Book) இணைத்துக் கொள்ளும் நிர்ப்பந்தமும் பிரித்தானியாவுக்கு ஏற்பட்டது. எனினும், 1945களில் பிரித்தானியா இதனை முற்று முழுதாக மீறிவிட்டது. அமெரிக்காவின் கண்காணிப்புடன் சியோனிஸத் திட்டங்கள் புத்துயிர்ப்புப் பெற்றன.

15. 1947 நவம்பர் 29ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபை அதன் 181ஆவது இலக்க தீர்மானத்தை வெளியிட்டது. "பலஸ்தீன் இரு நாடுகளாகப் பிரிக்கப்படும். அதில் 54 விதம் யூதர்களுக்கும் 45 விதம் அறபிகளுக்கும் வழங்கப்படும். 1 விதம் சர்வதேச நிர்வாகத்தின் கீழ் இருக்கும். அது குத்ஸ் பிரதேசமாகும்" என்று தெரிவித்தது. ஐ.நா. சபையின் சாசனத்திற்கு (UN Charter) ஏற்ப அமையாத தீர்மானங்கள் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டியவையன்று. இத்தீர்மானம் ஐ.நா. சபையின் சாசனத்திற்கே முரணானதாகும். இது குடிமக்களின் உரிமையை மீறிய ஒரு தலைப்பட்சமான தீர்மானமாகும். இவ்விடயத்தில் பலஸ்தீனர்களின் கருத்துக்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. பலஸ்தீனர்கள் இதற்கு ஆதரவாக வாக்களிக்கவுமில்லை. வந்தேறு குடிகளான யூதர்களுக்கு இவ்வாறான உரிமையை வழங்குவது அப்பட்டமான அத்துமீறலாகும்.

16. 1948 மே 14ஆம் திகதி சியோனிஸ இயக்கம் இஸ்ரவேல் என்ற நாட்டைப் பிரகடனப்படுத்தியது. குறைந்த அனுபவமும், பலவீனமான தொடர்பும், மோசமான தலைமைத்துவத்துக்கும் முன்னுதாரணமாகக் காணப்பட்ட அறபுப் படையினர் தோல்வியைத் தழுவிக் கொண்டனர். அவர்களில் சிலர் காலனித்துவவாதிகளின் செல்வாக்குக் குட்பட்டிருந்தனர். சியோனிஸம் பலஸ்தீனின் 77 வீதமான நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டது; பலஸ்தீன பிரதேசத்தில் வாழ்ந்த 925,000 மக்களில் 700,000 பேரை பலப்பிரயோகத்தின் மூலம் விரட்டியடித்தது; (1948ன் இறுதிகளில் பலஸ்தீனர்களின் மொத்த குடித்தொகை 140,000ஆகக் காணப்பட்டது). ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் காணப்பட்ட 585 கிராமங்களில் 478 கிராமங்களைப் பூரணமாக தரைமட்ட

மாக்கியது; 34 படுகொலைக் களங்களை அரங்கேற்றியது. பலஸ்தீன் என்ற பெயரில் எஞ்சியது ஜோர்தானின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற மேற்குக் கரையும் எகிப்தின் கீழ் இருக்கின்ற காஸாவும் தான். மேற்குக்கரை 5878 சதுர கிலோ மீற்றர் பரப்பையும், காஸா 363 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டது. பலஸ்தீன அகதிகள் மீண்டு வர அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இஸ்ரேலுக்கு ஐ.நா.வின் அங்கத்துவத்தை வழங்கவும் ஐ.நா. சபை உடன்பட்டது. இந்நிபந்தனையை சியோனிஸம் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை.

17. 1948-1967 காலப் பகுதியில் தேசியவாதப் போராட்டங்கள், "ஒற்றுமையே விடுதலைக்கான வழி" என்ற கோஷங்கள் அரசோச்சிக் கொண்டிருந்தன. அறபு அமைப்புக்கள் ஜமால் அப்துந் நாஸருக்குக் கடிவாளத்தைக் கொடுத்தனர். பலஸ்தீன சுதேச தலைமைகள் தமது பங்கை விட்டுக் கொடுத்து பின்வாங்கின. எனினும், அறபு அமைப்புக் கள் போராட்டத்துக்கான சரியான முறைமைகளையோ (Methodology) தயார் நிலையையோ கொண்டிருக்கவில்லை. உண்மையில் அவர்கள் போராட்டத்தை விரும்பவில்லை. பலஸ்தீன எதிர்ப்புணர்வுகளும் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன. ஒரு பூரண மூல உபாயத் திட்ட மிடல் (Strategical Planning) அங்கு காணப்படவில்லை. போராட்ட மொன்றுக்குத் தயாராவதற்குப் பகரமாக பொதுமக்களின் எதிர்ப்பலை களே வெளிப்படுத்தப்பட்டன. இதே சமயம் சியோனிஸம் தனது பலத்தையும், ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொண்டது.

18. 1964ஆம் ஆண்டு அஹ்மத் ஷுகைரியின் தலைமையில் பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) ஆரம்பிக்கப்பட்டது. தனது கரத்திலிருந்து பலஸ்தீன் விவகாரம் நழுவிவிடும் என்று பயந்த ஜமால் அப்துந் நாஸர் இதற்கு நேரடியாக உதவினார். இதேநேரம் பலஸ்தீனில் இரகசிய இயக்கங்கள் பல களத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. குறிப்பாக 1957ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "பத்ஹ்" இயக்கத்தைக் குறிப்பிட லாம். PLO இயக்கத்தின் நோக்கம் 1948ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட பூமியை விடுதலை செய்வதாகும். விடுதலைக்கான ஒரே வழிமுறை ஆயுதப் போராட்டம்தான் என்று அது உறுதியாக நம்பியது. இது பொதுமக்களிடம் பலத்த வரவேற்பைப் பெற்றது. நீண்ட நாட்களின் பின்னர் பலஸ்தீனர்களுக்குப் பங்கேற்க சந்தர்ப்பம் கிடைத்தது.

1968ஆம் ஆண்டு பலஸ்தீன விடுதலை இயக்கங்கள் PLOவுடன் இணைந்து கொண்டன. குறிப்பாக "பத்ஹ்" இயக்கம் PLOவுடன் இணைந்து கொண்டது. 1969 பெப்ரவரி மாதத்திலிருந்து பத்ஹின் தலைவராக இருந்த யாஸிர் அரபாத் PLOவின் தலைமையை ஏற்றார். 1974ஆம் ஆண்டுகளில் அறபு அமைப்புக்கள் PLO ஐ பலஸ்தீனர்களின் சட்டரீதியான ஏக பிரதிநிதியாக பிரகடனப்படுத்தினர். அதேயாண்டு ஐ.நா. சபையில் பார்வையாளர் அந்தஸ்தும் வழங்கப்பட்டது.

19. 1967 ஜூன் மாதத்தில் நடைபெற்ற யுத்தம் அறபு அமைப்புக்களுக்கு ஒரு கசப்பான தோல்வியாக அமைந்து விட்டது. ஒரு சில நாட்களிலேயே பலஸ்தீனின் ஏனைய பகுதிகளையும் சியோனிஸம் ஆக்கிரமித்துக் கொண்டது. மேற்குக்கரையும் அதிலமைந்துள்ள குத்ஸின் கிழக்குப் பகுதியும் காஸாவும் வீழ்ந்தன. சுமார் 330,000 பலஸ்தீனர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். சிரியாவின் கோலான் குன்றுப் பகுதியும் (1,150 சதுர கிலோ மீற்றர்) எகிப்தின் சினாவும் (61,198 சதுர கிலோ மீற்றர்) வீழ்ச்சியடைந்தன.

20. பலஸ்தீன் பூமியை யூத மயப்படுத்தும் நடவடிக்கைகளில் சியோனிஸம் தொடர்ந்தும் ஈடுபட்டது; அதன் நாகரிக அடையாளங்களையும் இஸ்லாமியத் தனித்துவத்தையும் அது சிதைத்தது; 1948ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்ட நிலங்களில் சுமார் 96 வீதத்திலிருந்து அறபு மக்களை வெளியேற்றியது; அங்குள்ள நிலங்களும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பலஸ்தீனர்களின் சொத்துக்களும் இஸ்லாமியப் பொதுச் சொத்துக்களும் (வக்ப்) அங்குள்ள ஒரு சிலரின் உடமைகளும் சூறையாடப்பட்டன. அங்கு தற்பொழுது 756 யூதக் குடியேற்ற நகரங்களையும் கிராமங்களையும் சியோனிஸம் கட்டியெழுப்பியுள்ளது; 1967ஆம் ஆண்டு யுத்தத்தைத் தொடர்ந்து மேற்குக் கரையின் 60% நிலத்தை ஆக்கிரமித்துத் தகர்த்தது; 192 யூதக் குடியிருப்புக்களை அங்கு அமைத்துள்ளது. காஸாவின் 30%மான நிலத்தைப் பிடித்து வீடுகளை இடித்து விட்டு 14 யூதக் குடியேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. பலஸ்தீனர்கள் தமது பூமிக்கு மீள்வதனை சியோனிஸம் தொடர்ந்து தடுத்து வருகின்றது. யூதர்கள் குடியமர்வதற்கான சகல ஏற்பாடுகளையும் வழங்கியுள்ளது. 1949-2000க்கு இடைப்பட்ட காலத்தில் 2,800,000க்கும் மேற்பட்ட யூதர்கள் பலஸ்தீனுக்குக் குடிபெயர்ந்துள்ளனர். 2002ஆம் ஆண்டு 5,200,000 யூதர்கள் பலஸ்தீனில் இருக்க வேண்டும் என்பது அவர்களது கனவாகும்.

ஒரு பகுதியை கிட்டத்தட்ட 4 நூற்றாண்டுகளாக ஆட்சி செய்துள்ளனர். அது கி.மு.1000-கி.மு.586க்கு இடைப்பட்ட காலத்திலாகும். அசீரிய (Assyria), பாரசீக, பிர்அவ்னிய, கிரேக்க, ரோம ஆட்சிகள் அழிந்து விட்டதுபோன்று அவ்வாட்சியும் நீங்கிவிட்டது. ஆனால், பலஸ்தீனர்கள் அந்தப் பூமியில் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளனர். அங்கு இஸ்லாமிய ஆட்சி நீண்ட காலம் தொடர்ந்திருந்தது. கி.பி.636-கி.பி.1917 வரை இது தொடர்ந்தது. இடையில் சுமார் 90 வருடங்கள் சிலுவை வீரர்கள் ஆட்சி செய்தனர். மொத்தமாக 1200 வருடங்கள் பலஸ்தீன் முஸ்லிம்களிடம் இருந்தது. பலஸ்தீனுடனான யூதர்களின் தொடர்பு 1800 வருடங்களாக கி.பி.135-கி.பி.20ம் நூற்றாண்டு வரை இருக்கவில்லை. இக்காலத்தில் யூதர்களின் அரசியல் தொடர்போ, நாகரிக இணைப்போ, தலைமைத்துவமோ எதுவுமே இருக்கவில்லை. அவர்களது வேதப் போதனைகள் அப்பூமிக்கு மீள வருவதனை ஹராமாக்கி தடுத்திருந்தது. பிரபல எழுத்தாளர் ஆர்தர் கோய்ஸ்லருக்கு முன்பு ஆய்வு செய்த சில யூதர்களின் கருத்துப்படி சமகால யூதர்களில் 80 வீதமானவர்களுக்கு பலஸ்தீனுடன் வரலாற்றுத் தொடர்போ, பனூ இஸ்ராயீல்களுடனான இனத்துவ தொடர்போ இல்லை. இன்றைய யூதர்களில் மிகப் பெரும்பான்மையினர் கஸர் (Khazar)[4] யூதர்களின் வம்சா வழியினர் ஆவர். இது கவ்காஸ் பகுதிக்கு வடக்காக வாழ்ந்த பழைய துருக்கிய, தாத்தாரிய கோத்திரமாகும். கி.பி. 8ஆம் நூற்றாண்டுகளில்தான் இவர்கள் யூதர்களாக மாறினர். எனவே, யூதர்களுக்கான சிறிய உரிமையும் பலஸ்தீனில் இல்லை. அவர்களது உரிமைகள் தென் ரஷ்யாவுடன்தான் தொடர்புபடுகின்றது.

இன்னொரு வகையிலும் யூதர்களுக்கும் பலஸ்தீனுக்கும் இடையிலான தொடர்பு குறித்த வாதம் முறியடிக்கப்படுகின்றது. அதாவது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புனித பூமிக்குச் சென்றதனை அதிகமான பனூ இஸ்ராயீல்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அப்படி நிகழவில்லை என்று மறுக்கின்றனர். அதேபோன்று பாரசீக சக்கரவர்த்தி கோரஷ் யூதர்களை அடக்கியாண்ட காரணத்தினால் பபிலோனியாவை விட்டு அவர்கள் புனித பூமிக்குச் சென்றதனையும்

4. கஸர் (Khazar) என்பது கஸ்பியன் கடல் பிரதேசத்தில் கவ்காஸ் பிரதேசத்துக்கு வடக்காக வாழ்ந்த ஒரு கோத்திரமாகும்.

அழைக்கப்படும் மஸ்ஜிதுல் அக்ஸாவின் மேற்கு சுவரை அவர்கள் தகர்த்து விட்டனர். அதன் அருகில் உள்ள குடியேற்றங்களையும் துவம்சம் செய்து பூமியையும் அழித்துவிட்டனர். மஸ்ஜிதுல் அக்ஸாவின் கீழால் பாரிய குழிகளை பத்துக் கட்டங்களாகத் தோண்டியுள்ளனர். அக்ஸாவை தகர்த்து அவ்விடத்தில் யூதக் கோவிலை உருவாக்குவதற்கென்றே 25க்கும் மேற்பட்ட யூத பயங்கரவாத இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 1967-1998க்கு இடைப்பட்ட காலத்தில் மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு எதிராக 112 செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 72 நடவடிக்கைகள் 1993ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒஸ்லோ உடன்படிக்கையைத் தொடர்ந்தே மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 1969 ஆகஸ்ட் 21ஆம் திகதி மஸ்ஜிதுல் அக்ஸா எரிக்கப்பட்டமை மிகப் பெரும் அத்துமீறலாகும்.

23. பலஸ்தீன அகதிகள் தமது பூர்வீக பூமிக்கு மீளச் செல்வதற்கான உரிமையை (Right of Return) அவர்கள் விட்டுக் கொடுக்கவில்லை. அவர்களது நிலத்தில் அல்லாது வேறு இடங்களில் குடியமர்த்தப்படுகின்ற எந்தத் திட்டத்தையும் அவர்கள் ஏற்கவில்லை. இவ்வாறு 243 திட்டங்கள் முன்வைக்கப்பட்டபோதும் அதனை நிராகரித்து விட்டனர். அகதிகளின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஐ.நா. சபை 110க்கும் மேற்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. சியோனிஸம் இதனைக் கணக்கில் எடுக்கவேயில்லை. பெரிய நாடுகள் கூட இதனைக் கண்டுகொள்ளவில்லை. சர்வதேச சமூகம் (International Community) எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை. (2002ஆம் ஆண்டு கணக்கின்படி) 1948ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட பூமியில் இருந்து வெளியேற்றப்பட்ட அகதிகள் தொகை 5,370,000 பேராகும். காஸா, மேற்குக்கரையிலிருந்து வெளியேற்றப்பட்டு மீள்குடியேற அனுமதிக்கப்படாதவர்களின் தொகை 1,200,000 ஆகும். அங்கு சுமார் 6,570,000 பேர் இடம்பெயர்ந்தவர்கள் உள்ளனர். இது பலஸ்தீனர்களின் குடிசனத்தில் 70.7% ஆகும். உலகத்திலே மிகப் பெரிய அகதிகள் தொகை இதுதான். 20ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய, மிகப் பழைய, மீக நீண்ட மனிதாபிமானப் பிரச்சினை பலஸ்தீன அகதிகள் விவகாரமாகும்.

24. 1949 முதல் எழுபதுகளின் ஆரம்பம் வரை ஐ.நா. நபை "அகதிகள் பிரச்சினை" என்ற வகையில் பலஸ்தீன விடயத்தில் ஈடுபட்டது. 1974 முதல் ஐ.நா.வின் பொதுச் சபை பலஸ்தீனுக்குச் சார்பாக பெரும்

பான்மை பலத்துடன் பல தீர்மானங்களை எடுத்தது. பலஸ்தீனர்களுக்கான சுயநிர்ணய உரிமையை (Self Determination Right) வழங்குதல், பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப் பெறுவதற்கான போராட்டங்களை அங்கீகரித்தல் (பலஸ்தீனர்களது ஆயுதப் போராட்டமும் அங்கீகரிக்கப் பட்டிருந்தது); சியோனிஸம் ஒரு இனவாத இயக்கம் என்ற பிரகடனம், அகதிகள் மீளச் செல்வதற்கான உரிமை என்பன அவற்றில் சிலவாகும். எனினும், அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இத்தீர்மானங்களைத் தோற்கடிக்கவும், செல்லுபடியற்றதாக மாற்றவும் தீவிரமாக ஈடு பட்டன. எந்தத் தீர்மானமும் நிறைவேறக் கூடாது என்பதற்காக தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பலமுறை பயன்படுத்தியது. அத்தோடு சியோனிஸ நாடு பலஸ்தீனில் உருவாகவும், அதன் இருப்பு பலம் பெறவும் இவ்வதிகாரம் பயன்படுத்தப்பட்டது. பலஸ்தீன வரலாறு நெடுகிலும் சியோனிஸத் திட்டங்களின் வெற்றியின் பின்னணியில் உலகின் பலமான சக்திகள் தொழிற்படுகின்றன என்பது மிகத் தெளிவாகும். 1948ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட பலஸ்தீனின் 77%மான நிலத்தில் யூத நாட்டை உருவாக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு என்ற உரிமையையும் இந்நாடுகளே வழங்கின.

25. 1967-1970 வரையான காலம் பலஸ்தீன எதிர்ப்புக்கள், தியாக செயற்பாடுகளது பொற்காலமாகும். எனினும், 1971ல் ஜோர்தான் எல்லையைப் பயன்படுத்துவது தடுக்கப்பட்டது. பின்னர் லெபனான் எல்லை பயன்படுத்தப்பட்டது. அங்கும் இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது; கட்டடங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. 1975-1990 வரையான லெபனான் உள்நாட்டு யுத்தம் இதற்குச் சாதக மாகியது. சியோனிஸ ஆக்கிரமிப்புக்கள் லெபனானிலும் தொடர்ந்தன. 1978ஆம் ஆண்டு தென் லெபனான் பூண்டோடு அழிக்கப்பட்டது. அதனை யூத அரசு தனது பாதுகாப்பு வலயமாக ஆக்கியது; அங்கு தனது உளவுப் படையை நிரப்பியது. பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் போராளிகளை லெபனாலிருந்து விரட்டியடிக்கவும் அதன் தளங்களை தகர்க்கவுமென 1982ஆம் ஆண்டு லெபனான் மீண்டும் தாக்குதலுக்குட் பட்டது. இவ்வகையில் சியோனிஸ அரசுடனான அனைத்து எல்லை களும் மூடப்பட்டன. பலஸ்தீன விடுதலைப் போராட்டங்களுக்கான வாயில்கள் மூடப்பட்டன.

26. பலஸ்தீனப் புரட்சி தனதுடன் பிறப்புக்களிடமிருந்தே பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இரத்தமும் சக்தியும் விணடிக்கப்பட்டன. பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்தவர்களுடன் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டன. 1973ஆம் ஆண்டு ஒக்டோபர் யுத்தத்தில் எகிப்து, சிரியாவுக்கு ஓரளவு வெற்றி கிடைத்தது. ஆனால், 1974ஆம் ஆண்டு பலஸ்தீன விடுதலை இயக்கம் பலஸ்தீனின் ஏக பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து பலஸ்தீனம் குறித்த அறபிகளின் போக்கில் ஒருவித அதிருப்தி காணப்பட்டது. 1978ஆம் ஆண்டு செப்டம்பரில் எகிப்து கேம்ப்-டேவிட் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. இதன் மூலம் அறபு-சியோனிஸ மோதலில் பெரும் சக்தியாக இருந்த எகிப்து அதிலிருந்து வெளியேறிவிட்டது. பின்னர் 1980-1988 வரை ஈரான்-ஈராக் யுத்தம் இடம்பெற்றது. பெற்றோலிய விலைகள் குறைந்தமையினால் பலஸ்தீனுக்கான வளைகுடாவின் உதவிகள் நிறுத்தப்பட்டன. 1990ம் ஆண்டு ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தது. இதன் காரணமாக வளைகுடா யுத்தம் ஏற்பட்டது. விசாலமான அறேபிய-இஸ்லாமிய உறவுகள் துண்டிக்கப் பட்டன. அதே சமயம் சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்தது. கிழைத்தேயக் கூட்டுகளும் பலமிழந்துவிட்டன. இவையனைத்தும் பலஸ்தீன எதிர்ப்பின் வலிமையைக் குன்றச் செய்தன. பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் (PLO) தலைமைகள் சமாதானம் என்ற தீர்மானத்தை நோக்கி நடை பயின்றனர். அவர்கள் தமது செயற்பாடு களை இராஜதந்திர இயலுமை (Diplomatic Possibles) என்ற வட்டத் துடன் சுருக்கிக் கொண்டனர். மாற்ற முடியாத கொள்கைகளைக் கூட விட்டுக் கொடுக்க PLO வின் தலைமைகள் தயாராய் இருந்தன. தலைமையில் தொடர்ந்திருத்தல், பலஸ்தீனை பிரதிநிதித்துவம் செய்தல் என்பனவே அவர்களின் இலட்சியமாக இருந்தது.

27. PLO மிகவும் பலவீனப்பட்டிருந்தது. எந்தளவுக்கென்றால் பலஸ்தீனைப் பிரிக்கவும் அவர்கள் உடன்பட்டனர். 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. சபையின் 181ஆவது தீர்மானமான "பலஸ்தீனை யூதர்கள் -அறபிகளிடையே பிரித்தல்" என்ற தீர்மானத்தை PLO ஏற்றுக் கொண்டது. 1967ஆம் ஆண்டு பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட 242ஆவது தீர்மானமான "அகதிகள் பிரச்சினை என்ற வகையில் பலஸ்தீனப் பிரச்சினையை கையாளல் -இதனை சமாதானத்தின் ஊடாகத் தீர்த்துக் கொள்ளல்" என்ற

தீர்மானத்தையும் ஏற்றுக் கொண்டது. 1991 ஒக்டோபரில் PLO வும் அறபு நாடுகளும் சியோனிஸஅமைப்புடன் நேரடி சமாதானப் பேச்சு வார்த்தை களில் ஈடுபட்டது. இது மெட்ரிட் நகரில் இடம்பெற்றது. இரண்டு வருடமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டபோதும் சியோ னிஸ அமைப்புடன் உடன்பாட்டுக்கு வர முடியாமல் போய்விட்டது. எனவே, 1992 டிசம்பர் முதல் பல இரகசியப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில்தான் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன் பின்னர்தான் ஒஸ்லோ உடன்படிக்கை (ஆரம்பத்தில் காஸா -ஜெரிக்கோ உடன்படிக்கை) நோர்வேயில் உள்ள ஒஸ்லோவில் கைச்சாத்திடப்பட்டது. 1993 டிசம்பர் 13ஆம் திகதி இது சியோனிஸத் துக்கும் PLO வுக்கும் இடையில் கைச்சாத்தானது.

28. PLOவின் தலைமைகள் காஸா-ஜெரிக்கோ உடன்பாட்டின் போது இஸ்ரேலின் இருப்புரிமையையும் (Right of being) அவர்களது ஆக்கிரமிப்பையும் சட்டபூர்வமானதென்றும் ஏற்றுக் கொண்டனர். பலஸ்தீனின் 77% நிலத்தை இஸ்ரேல் வைத்திருப்பதை அங்கீகரித்தனர். ஆயுதப் போராட்டத்தை விட்டு விடவும், மக்கள் எழுச்சியை அடக்கவும் PLO உடன்பட்டது. அத்தோடு பலஸ்தீனின் தேசியக் கொள்கையாக கருதப்படுகின்ற "சியோனிஸ அமைப்பை அழித்தல், முழுப் பலஸ்தீனையும் விடுவித்தல்" என்பவற்றுடன் தொடர்பான அனைத்து ஷரத்துக்களையும் நீக்கிவிடவும் PLO உடன்பட்டது. அனைத்துப் பிரச்சினைகளையும் சமாதான வழிமுறைகளின் ஊடாக தீர்த்துக் கொள்ளவும் உடன்பட்டது. இந்த உடன்படிக்கையின் மூலம் PLO தன்னையும் தனது இலக்குகளையும் தனது கொள்கைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டது. PLOவும் அதன் தலைமைகளும் இஸ்ரேலை அங்கீகரித்ததற்குப் பகரமாக பலஸ்தீனின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு சுய நிர்ணய அதிகாரம் (Self Determination) வழங்கப்பட்டது. அது காஸா, மேற்குக் கரையோடு சுருங்கி அதிகார சபையாகக் காணப்பட்டது. எதிர்வரும் ஐந்தாண்டு களுக்குள் பிரதான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் தெரிவிக் கப்பட்டது.

29. ஒஸ்லோ உடன்படிக்கையானது (காஸா-ஜெரிக்கோ) பலஸ்தீனி லும் அறபுலகிலும் இஸ்லாமிய உலகிலும் பல சிக்கல்களைத் தோற்றுவித்தது. எதிர்ப்புக்கள் கிளம்பின. இதற்கெதிரான பல

விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றைக் கீழ்வருமாறு தொகுத்து நோக்கலாம்:

★ சியோனிஸத்துடனான சமாதான உடன்படிக்கை ஏற்க முடியாத தாகும். எனவே இது செல்லுபடியற்ற ஒரு ஒப்பந்தமாகும். அத்தோடு ஆக்கிரமிக்கப்பட்ட பூமியை விடுவிக்க புனிதப் போரில் ஈடுபடுவது அவசியமாகும். இப்பூமியை பூரணமாக இஸ்லாத்தின் நிழலின் கீழ் கொண்டு வருவது வாஜிபாகும் (கட்டாயக் கடமையாகும்). இது சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான வாழையடி வாழை யாக தொடர்கின்றதொரு தொடர் போராட்டமாகும். இப்போராட்டம் பரம்பரை பரம்பரையாகத் தொடர்கின்றது. அல்லாஹ்வுடைய உதவியும் வெற்றியும் வரும்வரை இதில் நிலைத்திருக்க வேண்டும். பலஸ்தீன் என்பது இஸ்லாமிய வக்ப் (பொதுச்) சொத்தாகும். இதனை விட்டுக் கொடுக்க யாருக்கும் உரிமையில்லை. இன்றிருக்கின்ற பலவீனமான நிலையை கருத்திற் கொண்டு எதிர்கால சந்ததியினரின் உரிமையை அடகு வைப்பது யாருக்கும் அனுமதிக்கப்பட்டதல்ல. அத்தோடு பலஸ்தீன விவகாரம் அனைத்து முஸ்லிம்களினதும் பிரச்சினையாகும். எத்தனை யுகம் சென்றாலும் அதனை விட்டுக் கொடுக்க அனைத்து முஸ்லிம்களும் உடன்பட மாட்டார்கள். இது PLOவினதும் அதன் தலைமைகளினதும் சொந்த விடயம் என்று யாரும் நினைத்து விடக் கூடாது என்று இஸ்லாமிய அறிஞர்கள் தீர்ப்பு (பத்வா) வழங்கியுள்ளனர்.

★ PLOவின் தலைமைகள் ஒஸ்லோ உடன்படிக்கைக்கு மக்கள் அங்கீகாரத்தைப் பெறவில்லை. அவர்கள் தன்னிச்சையாகவே செயல்பட்டனர். பலஸ்தீன சுதேசிகளில் உள்ள இஸ்லாமியவாதிகளும் தேசியவாதிகளும் இடதுசாரிகளும் இவ்வுடன்படிக்கையைக் கடுமை யாக எதிர்க்கின்றனர். பத்ஹ் இயக்கத்துக்குள் இவ்விடயம் தொடர்பில் பாரிய முரண்பாடுகள் இருக்கின்றன.

★ இந்த உடன்படிக்கையானது தலையாய பிரச்சினைகளையும் உணர்வுபூர்வமான விடயங்களையும் பிற்போட்டுள்ளது. இதன் இறுதி விளைவு சியோனிஸத் தரப்பை தூய்மைப்படுத்தி (White wash) பலவீனமான பலஸ்தீனத் தரப்பின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்ப துடன் முடிகின்றது. இவ்விடயங்களைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்:

அ) குத்ஸ் நகரத்தின் எதிர்காலம்

ஆ) பலஸ்தீன அகதிகளின் எதிர்காலம்

இ) காஸா, மேற்குக் கரையில் உள்ள யூதக் குடியேற்றங்களின் எதிர்காலம்

பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று 8 வருடங்கள் கடந்த போதிலும் பெரிய பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. அதேசமயம் சியோனிஸம் ஆக்கிரமிக்கப்பட்ட பூமியில் வகைதொகையின்றி எவ்வித உடன்பாடுகளையும் மதிக்காமல் குடியேற்றங்களை உரு வாக்கிக் கொண்டிருக்கின்றது. மேலும் மேற்குக் கரையின் 18 வீதத்தையும் காஸாவின் 60 வீதத்தையும் மாத்திரமே ஒப்படைத்தது. இது முழுப் பலஸ்தீனினதும் 4.72 வீதமாகும். அதிலும் அதன் பாது காப்பு, நிர்வாகத்தை மாத்திரமே ஒப்படைத்தது. அத்தோடு மேற்குக் கரையின் 24 வீதமான நிலப்பரப்பு சியோனிஸத்தின் கடும் கண் காணிப்பின் கீழ் இருந்தது. மேற்குக்கரையின் 58% நிலமும் காஸாவின் 40% நிலமும் தொடர்ந்து சியோனிஸ ஆளுகையின் கீழ்தான் இருக் கின்றது.

★ இவ்வுடன்படிக்கை சியோனிஸத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றியது. சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்களை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை இஸ்ரேல் பெரும் சுமையாகக் கருதியது. அங்கு தோன்றும் பாதுகாப்பு, பொருளாதார நெருக்கடிகளில் இருந்து விடுபட வழிதேடிக் கொண்டிருந்தது. குறிப்பாக உலகத்திலே சனத்தொகை அடர்த்தி கூடிய காஸாவிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள தருணம் பார்த்திருந்தது.

★ சமாதான ஒப்பந்தத்தின் காரணமாக சுயாட்சி (Self Determination) கிடைத்தது. எனினும், மிகவும் வரையறுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரமே பலஸ்தீன அதிகார சபைக்கு வழங்கப்பட்டது. இதனைக் கூட ஆக்கிரமிப்புக் கரங்கள் தம் பிடியில் வைத்திருந்தன. அதிகார சபையின் சட்டங்கள், தீர்மானங்களுக்கு எதிராக ரத்ததிகாரத்தை (Veto Power) பிரயோகிக்கும் உரிமை சியோனிஸ அரசிடமிருந்தது. ஒரு படையை வைத்திருக்கும் அதிகாரம் கூட அவ்வதிகார சபைக்கு வழங்கப்படவில்லை. சியோனிஸத்தின் அனுமதியின் பேரில்தான் ஆயுதங்கள் கொண்டு வர அங்கீகாரம் வழங்கப்பட்டது.

★ சியோனிஸத்திற்கு எதிரான அனைத்து ஆயுத செயற்பாடுகளும், ஜிஹாதிய நடவடிக்கைகளும் முடக்கப்பட வேண்டும். பலஸ்தீன விடுதலைப் போராளிகள் கைது செய்யப்படல் வேண்டும். இவைதான் சமாதானத்தின் மீதான பற்றையும் நல்லெண்ணத்தையும் உறுதிப் படுத்துகின்றது என்ற பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. எனவே, அதிகார சபை இதனைச் செய்யும் நிர்ப்பந்தத்துக்குட்பட்டது. இதனை அவதானிக்க ஒன்பதுக்கும் மேற்பட்ட துணைக் இராணுவக் குழுக்கள் செயற்பட்டன. மக்கள் விடுகின்ற மூச்சுக்களைக் கூட அவர்கள் மோப்பம் பிடித்தனர். இதேசமயம் பொருளாதார, அரசியல், சமூக நிலவரங்கள் வீழ்ச்சியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. துணைக்குழுக்களின் அத்துமீறல்கள் பிரமிக்கத்தக்க அளவு அதிகரித் தன. 2000ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற அக்ஸாவுக்கான "இன்திபாழா" போராட்டம் வரை அதிகார சபை இந்நடவடிக்கையைத் தொடர்ந்தது.

★ எல்லைப் புறங்கள் (borders) இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் கீழ் தொடர்ந்திருந்தது. பலஸ்தீன அதிகார சபையின் எல்லைக்குள் நுழைதல் அல்லது அங்கிருந்து வெளியேறுதல் என்பதை இஸ்ரேல்தான் தீர்மானித்தது. அனுமதி வழங்குதல் அல்லது தடுத்தலை தனது உரிமையாக இஸ்ரேல் கருதியது.

★ உடன்படிக்கையானது, பலஸ்தீனர்களின் சுயநிர்ணய உரிமை பற்றியோ பலஸ்தீனின் சுதந்திரம் பற்றியோ எதுவும் பேசவில்லை. அத்தோடு மேற்குக்கரையும், காஸாவும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பூமி என்று ஏற்றுக் கொள்ளப்படவுமில்லை.

★ இவ்வுடன்படிக்கையானது அறபு-இஸ்லாமிய நாடுகளுக்கும் சியோனிஸ அமைப்புக்கும் இடையில் உடன்படிக்கைகள் கைச்சாத் திடப்படவும் நல்லிணக்கம் தோன்றவும் காரணமாகியது. பிராந்தியத் தில் சியோனிஸ ஊடுருவலுக்கும், பொருளாதார மேலாதிக்கத்துக்கும் இது வழிகோலியது. அத்தோடு பிராந்தியத்தில் அரசோச்சிய தேசிய வாதத்துக்கும், வளர்ந்து கொண்டிருந்த இஸ்லாமிய சக்திகளுக்கும் பெரும் அடியாகவும் இது மாறியது.

*30. 1987-1994க்கு இடைப்பட்ட 'இன்திபாழா' போராட்டம் பலஸ்தீனுள் மீள் எழுச்சியை ஏற்படுத்தியது. பலஸ்தீன எதிர்ப்பின் அச்சாணியாக இஸ்லாம் காணப்பட்டது. குறிப்பாக ஹமாஸ் இயக்கம்*

போராட்டத்தை முன்னெடுத்தது. இந்தப் போராட்டம் பலஸ்தீன் விவகாரம் தொடர்பில் அறேபிய, இஸ்லாமிய, சர்வதேச கவன யீர்ப்பையும் ஈடுபாட்டையும் புதுப்பித்தது. எனினும், பலஸ்தீனத் தலைமைகளின் போக்குகளும் அறபுலகில் நிலவிய சூழ்நிலையும் இதுவொரு விடுதலைப் போராட்டமாகப் பரிணமிக்க முட்டுக்கட்டை களாயின. பலஸ்தீனத் தலைமைகளோ சியோனிஸத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு இன்திபாழாவை அரசியல் முதலீடாகப் பயன்படுத்த முனைந்தன.

31. செப்டம்பர் 2000 இன்று வரையான (மார்ச் 2002) 'இன்திபாழா' போராட்டம் பலஸ்தீனர்கள் தமது நில உரிமையை விடத் தயாராய் இல்லை என்பதை உறுதிப்படுத்தியது. மேலும், பலஸ்தீனர்களின் விசாலமான நடவடிக்கைகளையும், இஸ்லாமியப் பரிணாமத்தையும் இங்கு நாம் காண முடியும். இன்திபாழாவின் காரணமாக சமாதானப் போர்வையைப் போர்த்தியுள்ள சியோனிஸத்தின் மோசமான உண்மை முகம் வெளிப்பட்டது. அவர்களின் துஷ்டத்தனங்களைக் காண முடிந்தது. இது 'சமபங்காளிகள்' என்ற திட்டத்திற்கு விழுந்த ஒரு பலத்த அடியாகும். இன்திபாழா காரணமாக பலஸ்தீனர்கள் கடுமையான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. 1200க்கும் மேற்பட்டவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். 35,000க்கும் மேற்பட்ட வர்கள் காயமடைந்தனர். 58 வீதமானவர்கள் தமது தொழில்களை இழந்தனர். எனினும், அவர்கள் தமது திட உறுதியை, தீவிர எதிர்ப்பை விட்டுவிடவில்லை. இதில் அனைத்துப் போராட்டக் குழுக்களும் இணைந்து கொண்டன. முதல் முறையாக சியோனிஸம் பயப்படும் விதமான நிகழ்வுகள் நடந்தேறின. அங்கு பீதிச் 'சமநிலை' தோன்றி யது. சியோனிஸத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து இடங்களிலும் பலத்த அடி கொடுக்கப்பட்டது. 300க்கும் மேற்பட்ட சியோனிஸ்டுகள் கொல்லப்பட்டனர். 1700க்கு மேற்பட்டோருக்குக் காயம் ஏற்பட்டது. இன்திபாழாவின் தோற்றமும் வளர்ச்சியும் நீடிப்பும் சியோனிஸத் திற்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தது; அவர்களது தலைசிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாகியது; பொருளா தாரம் வீழ்ச்சியடைந்தது; உல்லாசப் பயணத்துறையும் பின்னடைந் தது. பல யூதர்கள் பலஸ்தீனை விட்டு வெளியேறத் தொடங்கினர். சியோனிஸம் எதில் தங்கியிருக்கின்றதோ அதனை இன்திபாழா ஒரு குலுக்கு குலுக்கியது. அவைதான் பாதுகாப்பும் பொருளாதாரமுமாகும்.

32. பலஸ்தீன முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அதே துன்பங்களும் கொடுமைகளும் அநீதிகளும் அகதி வாழ்வும் அங்கிருந்த கிறிஸ்தவர்களுக்கும் ஏற்பட்டது. பலஸ்தீனை பிரித்தானியர் ஆக்கிரமித்தபோது தேசியவாத சக்திகளுடன் இணைந்துகொண்டு அவர்களும் பலஸ்தீன விடுதலைக்காகப் போராடினர். தேசிய ஒருமைப்பாட்டினதும் ஐக்கியத்தினதும் முன்னுதாரணமாக அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். அறபுத்துவத்தை (Arabism) பாதுகாக்க வேண்டுமென்று பேச்சாலும் பேனையாலும் துப்பாக்கியாலும் பாடுபட்டார்கள். அவர்கள் முஸ்லிம்களுடன் இணைந்து செயல்பட்டனர். தாம் மொழியாலும், பாரம்பரியத்தாலும் இன அடையாளத்தாலும் (Identity) இப்பிராந்தியத்தைச் சார்ந்தவர்கள் என்பதனைத் தெளிவாகத் தெரிவித்தனர்.

33. தாய்நாட்டை நேசிப்பதும் அதன் பூமியையும் குடிமக்களையும் புனிதங்களையும் பாதுகாப்பதும் மார்க்கக் கடமையும் மனித உரிமையுமாகும். தேசிய உணர்வும் குடும்பம், பரம்பரை, கோத்திரத்தை நேசிப்பதும் இயல்புணர்வாகும். இவ்விடயத்தில் ஹராமொன்று ஹலாலாக்கப்படாதபோது -ஹலாலொன்று ஹராமாக்கப்படாதபோது- அடுத்தவனின் உரிமையை மீறாதபோது- இவை அனுமதிக்கப்பட்டவையுமாகும். பலஸ்தீனுக்காகப் பாடுபடல் என்பது தேசியவாத அடிப்படையிலோ (Nationalism) அறபுத் தேசியவாத ரீதியாகவோ, இஸ்லாமிய முறையிலோ, மனிதாபிமான நீதியாகவோ இருக்க முடியும். எப்படியிருப்பினும் ஒன்றையொன்று பூரணப்படுத்த வேண்டுமேயொழிய ஒன்றுடன் ஒன்று முரண்பட்டுக் கொள்ளக் கூடாது. இன்னொரு வகையில் கூறுவதென்றால், சமூக சீர்கேடுகளுக்குத் தீர்வைத் தேடுதல், நாகரிக வளர்ச்சியை அடைதல், இஸ்லாத்துக்கு பூமியில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளல், அறபு-இஸ்லாமிய ஐக்கியத்தை எற்படுத்தல், பலஸ்தீனை விடுவித்தல் போன்ற அனைத்தும் ஒரு சாரார் அடுத்த சாராருடன் ஒத்துழைத்து பூரணப்படுத்த வேண்டிய விடயங்கள். தோளோடு தோள் நின்று உழைக்க வேண்டிய விடயங்கள். பிரிந்து, பிளவுபட்டு, சிதறி சின்னாபின்னமாகி இதனைச் சாதிக்க முடியாது.

34. இஸ்லாம் சமாதானத்தின் மார்க்கமாகும். (தீனுல் இஸ்லாம்) ஸலாம் (சாந்தி, சமாதானம்) என்பது அல்லாஹ்வின் திருநாமமுமாகும். முஸ்லிம்கள் தமக்கிடையே வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்ள

'ஸலாம்' என்ற வார்த்தையையே பயன்படுத்துகின்றனர். சுவனம் தாருஸ் ஸலாம் (அமைதி நிறைந்த வீடு) எனப்படுகின்றது. இஸ்லாத்தின் அடுத்தவர்களுடனான தொடர்பானது மத சகிப்புத் தன்மை (Tolerance), பரஸ்பர புரிந்துணர்வு, சமாதான சகவாழ்வு (Coexistence), சிறந்த கலந்துரையாடல்கள் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அத்தோடு இஸ்லாம் பயங்கரவாதத்துக்கு எதிரானது. சிவிலியன்கள் கொலை என்பன செய்யப்படுவதை இஸ்லாம் ஏற்பதில்லை. அதேசமயம் இஸ்லாம் சத்திய மார்க்கமுமாகும். அது நீதியானது; சுதந்திரமானது. இம்மார்க்கம் அநீதியிழைப்பதனை ஏற்பதில்லை. அதே போன்று அதனைப் பின்பற்றுகிறவர்கள் அநீதிக்குள்ளாவதனையும் அது அங்கீகரிப்பதில்லை. இந்த மார்க்கம் இழிவுபடுத்தப்படுவதனையும் இது சகித்துக் கொள்வதில்லை. இஸ்லாத்தின் கண்ணியமும், அதன் பூமியும் அதன் புனிதங்களும் பேணப்பட வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் தம்மிடமுள்ள பெறுமதியானவற்றைக் கூட செலவழிப்பார்கள். பலஸ்தீனர்களுக்கு அநியாயம் இழைப்பதனூடாகவோ, அவர்களது உரிமைகளைக் கபளீகரம் செய்வதன் மூலமாகவோ அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதன் வாயிலாகவோ சமாதானத்தை ஒருபோதும் அடைய முடியாது. பலஸ்தீனை விடுவிப்பதற்கான ஜிஹாத் தொடர்ந்திருக்கும். அதுவே கண்ணியமானது. கண்ணியவான்களின் உறுதிப் பிரமாணமாகவும் அதுவே இருக்கும். மேற்குலகும் சியோனிஸ ஊடகங்களும் பயன்படுத்துகின்ற 'சமாதானம்', 'பயங்கரவாதம்' என்ற சொல்லாடல்களுக்கு எவ்வித பெறுமானமும் இல்லை.

*35. 200 அணுகுண்டுகளை தன்னிடம் வைத்துள்ள, 72 மணித்தியாலங்களுக்குள் 7 இலட்சம் பேர் கொண்ட படையொன்றைத் திரட்ட முடியுமான சியோனிஸ அமைப்பு இஸ்லாமிய உலகின் இதயமான பலஸ்தீனில் இருப்பது சர்வதேச சமாதானத்திற்கு பாரிய அச்சுறுத்தலாகும். அவர்களது அறைகூவல்கள் மூன்றாவது உலக யுத்தத்திற்கான அழைப்பாகும். முஸ்லிம்கள் எப்போதாவது பலம் பெறுவார்கள். அவர்களும் பாரிய ஆயுதங்களை தம் கைவசம் வைத்துக் கொள்வார்கள். முஸ்லிம்கள் தமது பூமியை விட்டுக் கொடுக்கவில்லை. தம்மைப் பலவீனப்படுத்தி தமது ஒற்றுமையைக் குலைக்கின்ற சியோனிஸத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவுமில்லை; ஏற்கவும் மாட்டார்கள். இதற்கு முன்பு இதுபோன்ற அமைப்புக்கள் அழிந்து*

விட்டது போன்று இதுவும் தோற்கடிக்கப்படும். இதனை அழிக்க முஸ்லிம்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருப்பார்கள். இவ் வமைப்புக்கு உதவியமை மனித சமூகத்தை அழிக்கவே பயன்பட்டது என்பதை பெரிய நாடுகள் அப்போதுதான் புரிந்து கொள்ளும். இந்தப் பயங்கரமான நிலைமை ஏற்படுவதற்கு முன்னமே விலகிச் செல்வது இவ்வமைப்புக்குச் சிறந்தது.

36. யூதர்களுடனான முஸ்லிம்களின் போராட்டம் 'அவர்கள் யூதர்கள்' என்பதனால் ஏற்பட்டதல்ல. அஹ்லுல் கிதாப்கள் (வேதம் வழங்கப்பட்டவர்கள்) -திம்மிகளுடனான (சிறுபான்மை) முஸ்லிம் களின் உறவானது நீதி, நல்லமுறையில் நடந்து கொள்ளல் என்பவை மூலமே அமையும். இஸ்லாமிய ஆட்சியின் கீழ் அவர்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டது. மத உரிமையும் பூரண குடியுரிமையும் அவர்களுக்கு இங்குதான் கிடைக்கப் பெற்றது. 'யூதர்கள் என்ற தலையிடி' (The Jewish Problem) என்ற எண்ணக்கரு ஐரோப்பாவில் தான் தோன்றியது. உயர் குடியினருக்கு எதிரான எதிர்ப்புக்கள் அங்குதான் வலுவானது. இவை இஸ்லாமிய உலகில் தோன்றியவை யல்ல. ஐரோப்பாவில் இனவெறியும் மதவெறியும் தலைதூக்கி யூதர்கள் அடக்குமுறைக்கு உட்பட்டபோது, அவர்கள் பாதுகாப்பாக இஸ்லா மிய உலகில்தான் தஞ்சம் புகுந்தார்கள். முஸ்லிம்கள் அத்துமீறிய சியோனிஸ யூதர்களுடன்தான் போராடுகின்றனர். அவர்கள் பலஸ்தீன பூமியை பலாத்காரமாகக் கொள்ளையிட்டவர்கள். அதன் குடிமக்க ளைத் துரத்தியடித்தவர்கள். அதன் புனிதங்களை மாசுபடுத்தியவர்கள். தமது நிலத்தை ஆக்கிரமித்தவர்களுடன் -அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தாலும்- எந்த மதத்தைப் பின்பற்றினாலும்- எந்த இயக்கத்தை சார்ந்திருந்தாலும்- எந்த குழுவுடன் இணைந்திருந்தாலும் முஸ்லிம்கள் போராடுவார்கள்.

37. பலஸ்தீனை விடுவிப்பதும், சியோனிஸத் திட்டங்களைத் தகர்ப்பதும் இஸ்லாத்தைச் சார்ந்தே முன்னெடுக்கப்படல் வேண்டும். ஏனெனில், உண்மையான அடியார்களுக்கு வெற்றியைத் தருவதாக அல்லாஹ் பொறுப்பேற்றுள்ளான். மேலும், இஸ்லாம்தான் சமூகத்தின் அகீதா (நம்பிக்கை) ஆகும். இதன் மூலம்தான் வெற்றியும் நலன்களும் கிடைக்கின்றன. சமூகத்தைத் தயார்படுத்துவதற்கும் அதன் சக்தியைத் திரட்டுவதற்குமான மிகச் சிறந்த வழிமுறை இஸ்லாம்தான். வரலாற்ற

னுபவம் இதனைக் கோடிட்டுக் காட்டுகின்றது. தாத்தாரியர்கள், சிலுவை யுத்த வீரர்களிடமிருந்து குத்ஸை விடுவிக்க இஸ்லாத்தால் முடிந்தது. இஸ்லாமியத் தீர்வின் வெற்றி மிக உறுதியானது. ஏனைய சிந்தனைகளின் தோல்வி நிச்சயமானது என்பதை சமகால நிகழ்வுகளும் புதிய வரலாறும் எடுத்தியம்புகின்றது.

38. பலஸ்தீன் விவகாரத்தில் இஸ்லாமியத் தீர்வின் சில முக்கிய அடிப்படைகளை நோக்குவோம்:

அ) இஸ்லாம் என்பது நம்பிக்கையும் நடைமுறையும் வாழ்க்கைக் கான வழிகாட்டுதலும் அல்லாஹ் இறக்கியருளியதைக் கொண்டு தீர்ப்பளிப்பதுமாகும்.

ஆ) சியோனிஸத் திட்டங்களை எதிர்கொண்டு அவர்களைத் தோற் கடிக்க உண்மையான பொருத்தமான இஸ்லாமியத் தலைமைகளால் மாத்திரமே முடியும்.

இ) முழு இஸ்லாமிய உலகையும் உள்ளடக்கும் விதமாக சியோ னிஸ-யூத எதிரிகளுடனான போராட்டத்தின் வட்டத்தை விசாலிக்க வேண்டும். இப்பிரச்சினையை ஒருபோதும் பலஸ்தீனுடன் மாத்திரம் அல்லது அறபு தேசியாவதத்துடன் மட்டும் சுருக்கக் கூடாது. ஏனெனில், பலஸ்தீன விடுதலை என்பது அனைத்து முஸ்லிம்களுக்குமான கட்டாயக் கடமை (பர்ளு ஐன்) ஆகும். சியோனிஸ யூதர்கள் தமது திட்டங்களை சர்வதேச ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் முன்னெடுக்கின்றனர். இதேபோன்று நாமும் செயல்படுவதனூடாகத் தான் இச்சவாலை எதிர்கொள்ள முடியும்.

ஈ) யூதர்களின் அராஜகங்கள் முஸ்லிம் சமூகத்துக்குப் பரவாமல் பாதுகாக்கும் முதல் தடுப்புச் சுவராக பலஸ்தீனர்களே இருக்கின்றனர். இவ்வகையில் அவர்களது ஜிஹாதும் தாங்கு திறனும் தொடரவும் அப்பூமியில் அவர்கள் உறுதியாக இருக்கவும் அவர்களுக்கு உதவு வதும் அவர்களை சார்ந்திருப்பதும் அவர்களைத் தயார்படுத்துவதும் அவசியமாகும்.

உ) முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்கான முயற்சிகள் அதன் அரசியல், பொருளாதாரம், கல்வி, இராணுவ முன்னேற்றத்துக்கும், அபிவிருத் திக்குமான நுழைவாயிலாக இருக்கும். இதன் மூலம் முஸ்லிம்களால் விடுதலையின் சுமைகளையும் ஜிஹாதின் பொறுப்புக்களையும்

சுமக்கக் கூடியதாய் இருக்கும். அத்தோடு மனித சமூகத்திற்கு தலைமைத்துவம் வழங்கவும் கிலாபத் பணியை சுமக்கவும் உலகின் அதிகாரத்தைப் பெறவும் தேவையான நிபந்தனைகள் பூர்த்தியாகும்.

39. பலஸ்தீனில் சியோனிஸ யூதர்களின் தோல்வி சாத்தியமானது மாத்திரமல்ல -இது நிச்சயமாக நிகழும் பேருண்மையாகும். ஏனெனில், இது இறைவாக்காகும். முஸ்லிம்களின் வெற்றி குறித்து அல்லாஹ் அல்குர்ஆனில் சுபசோபனம் கூறியுள்ளான். பாவங்கள் மன்னிக்கப் பட்ட மனோஇச்சைப்படி பேசாத நபி (ஸல்) அவர்கள் இது பற்றி இயம்பியுள்ளார்கள். அநீதிகள் தொடர்ந்தும் நிலைக்காது என்பதுதான் பிரபஞ்ச இயங்கியல் விதி. வரலாறும் இதனை எடுத்தியம்புகின்றது.

40. பலஸ்தீன் விவகாரம் என்பது ஒரு மிகப் பெரிய மனிதாபிமானப் பிரச்சினையாகும். அங்குள்ள அநீதி இழைக்கப்பட்டோரின் அவலக் குரல்கள் மனித உரிமையாளர்களின் கவனயீர்ப்பை இன்னமும் பெறவில்லை. புத்துலக ஒழுங்கின் கபடத்தனங்களையும் இரட்டை வேடங்களையும் அங்கு நாம் காண்கின்றோம். அறிவிலும் தொழில் நுட்பத்திலும் முன்னேறிய நாகரிகத்தின் வடிகட்டிய நயவஞ்சகத் தனத்தை அங்கு அதிகமாகவே கண்டு கொள்ளலாம். நாய்களுக்கு அவர்கள் கொடுக்கின்ற கவனத்தை அங்குள்ள மனிதர்களுக்கு வழங்குவதில்லை. 6 மில்லியன் மக்கள் தூக்கியெறியப்படுவதனை வரவேற்கின்றார் கள். 570,000 அகதிகள் வானமே எல்லையாக, தரையே விரிப்பாகக் கொண்டு வாழ்வதை அங்கீகரிக்கின்றார்கள். ஆனால் சர்வதேச சட்டங்களுக்கு முரணான, அநாகரிக, வரலாற்று ரீதியாக ஏற்க முடியாத, பெறுமானமற்ற யூதவாதங்களுக்குத் தலைவணங்குகின்றார் கள். 4500 வருடங்கள் அப்பூமியை உயிர்ப்பித்த சொந்த நாட்டின் மக்களை விரட்டி விட்டு வந்தேறு குடிகள் நிம்மதியாக இருப்பதனை ஆதரிக்கின்றனர். புனித பூமியில் இரத்தம் சிந்தப்படுவதனை, குழந்தைகள் கொல்லப்படுவதனை, வீடுகள் இடிக்கப்படுவதனை, உரிமைகள் மீறப்படுவதனைக் கண்டு கொள்வதில்லை. சமாதானத்தினதும், அன்பினதும் பூமி கொலைவெறிப் பூமியாக மாறியுள்ளது. சியோனிஸ இயக்கமும் பலஸ்தீன ஆக்கிரமிப்பும் ஐரோப்பிய காலனித்துவவாதிகளின் எச்சங்களாகும். அவசரமாகவோ மெதுவாகவோ அவர்கள் பலஸ்தீனை விட்டு வெளியேறத்தான் வேண்டும். ■



ஒவ்வொரு முஸ்லிம் குடிமகனும் பலஸ்தீனின் அந்தஸ்தை புரிந்து வைத்துள்ளான். "இது புனித பூமியாகும்; அருள் நிறைந்த இடமாகும்" என அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. இங்குதான் முஸ்லிம்களின் முதல் கிப்லாவும், மூன்றாவது புனிதஸ்தலமுமான மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ளது. இது இஸ்ரா இடம்பெற்ற பூமி யாகும். நபியவர்கள் இந்த பூமிக்குத்தான் இரவில் வந்து சேர்ந்தார்கள். இது நபிமார்கள் வாழ்ந்த பூமியாகும். "இப்பூமியில் நிறைய நபிமார்கள் பிறந்துள்ளனர்; வாழ்ந்து வந்தனர்; அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்" என்பதாக அல்குர்ஆன் தெரிவிக்கின்றது. இஸ்லாமியக் கண்ணோட்டத் தின்படி இங்கு மக்கள் திரட்டப்படுவர். இங்கிருந்துதான் மக்கள் பரவிச் செல்வர். இது இஸ்லாத்தின் தாய்நாடாகும். இங்கு இருப்பவர் அல்லாஹ்வின் பாதையில் போராடியவராகக் கருதப்படுவார். கியாமத் வரை சத்தியத்துக்காகப் போராடுவோர் இங்கிருப்பர்.

40000